01-02-2025 Tamil
01/02/25 English

காலை முரளி ஓம் சாந்தி பாப்தாதா
Morning Murli Om Shanti BapDada

மதுபன்
Madhuban

இனிமையான குழந்தைகளே! ஆத்மாக்களாகிய உங்களது சுய தர்மம் அமைதியாகும், உங்களது தேசம் சாந்திதாமம் ஆகும், ஆத்மாக்களாகிய நீங்கள் சாந்த சொரூபமானவர்கள். ஆகையால் நீங்கள் அமைதியை யாசிக்க முடியாது.
Essence:Sweet children, the original religion of you souls is peace. The land of souls is the land of peace. You souls are embodiments of peace. Therefore, you cannot ask for peace.

கேள்வி:உங்களது யோக பலம் என்ன அதிசயம் செய்கிறது?
Question:What wonders does your power of yoga perform?

பதில்:யோக பலத்தின் மூலம் நீங்கள் முழு உலகையும் தூய்மையாக ஆக்குகிறீர்கள். நீங்கள் மிகக் குறைந்த குழந்தைகள் யோக பலத்தின் மூலம் இந்த முழு மலையையும் அகற்றி விட்டு தங்க மலையை ஸ்தாபனை செய்கிறீர்கள்.
Answer:With the power of yoga, you purify the whole world. There are very few of you children to remove the whole of this mountain with the power of yoga and establish a mountain of gold.

5 தத்துவங்களும் சதோ பிரதானம் ஆகிவிடுகிறது, நல்ல பழங்களை கொடுக்கும்.
Even the five elements will become satopradhan and give very good fruit.

சதோ பிரதான சரீரத்தின் மூலம் இந்த சரீரமும் சதோ பிரதானமாக இருக்கும்.
When matter is satopradhan, your bodies will also be satopradhan.

அங்கிருக்கும் பழங்கள் பெரியதாகவும், மிக மிக சுவையானதாகவும் இருக்கும்.
The fruit there is very large and delicious.

ஓம்சாந்தி.
Om shanti.

எப்பொழுது ஓம்சாந்தி என்று கூறப்படுகிறதோ அப்பொழுது மிகுந்த குஷி ஏற்பட வேண்டும். ஏனெனில் உண்மையில் ஆத்மாவானது சாந்தி சொரூபமானது ஆகும், அதன் சுய தர்மமே அமைதியாகும்.

When you say "Om shanti", you should have great happiness. In fact, you souls are embodiments of peace; the original religion of you souls is peace.

இதைப் பற்றி சந்நியாசிகளும் கூறுகின்றனர் - அமைதி என்ற மாலை உங்களது கழுத்தில் இருக்கிறது.
Sannyasis say of this that peace is the garland around your neck.

அமைதியை எங்கு வெளியில் தேடுகிறீர்கள்?
Why do you search for peace outside?

ஆத்மா இயற்கை யாகவே சாந்தி சொரூமானது.
Souls are themselves embodiments of peace.

இந்த சரீரத்தில் நடிப்பு நடிக்க வரவேண்டியிருக்கிறது.
They have to enter bodies in order to play their parts.

ஆத்மா சதா சாந்தமாக இருந்தால் பிறகு காரியங்கள் எப்படி செய்யும்?
If souls remained constantly in silence, how could they act?

காரியங்கள் செய்தே ஆக வேண்டும்.
Actions have to be performed.

ஆம், சாந்திதாமத்தில் ஆத்மாக்கள் சாந்தியாக இருக்கும்.
Yes, in the land of silence, souls remain silent.

அங்கு சரீரம் கிடையாது, ஆனால் இதை எந்த சந்நியாசி போன்றவர்களும் புரிந்து கொள்வது கிடையாது - நான் ஆத்மா, சாந்திதாமத்தில் வசிக்கக் கூடியவன்.
There are no bodies there. None of the sannyasis, etc. understand that each of them is a soul, that they are residents of the land of silence.

குழந்தைகளுக்கு புரிய வைக்கப்பட்டிருக்கிறது - சாந்திதாமம் நமது தேச மாகும், பிறகு நாம் சுகதாமத்திற்கு வந்து நடிப்பை நடிக்கிறோம், பிறகு இராவண இராஜ்யத்தில் துக்கம் ஏற்படுகிறது.
You children have been told that the land of silence is your home. Then you go to a land of happiness to play your parts and then it is Ravan’s kingdom in this land of sorrow.

இது 84 பிறவிகளின் கதையாகும்.
This is the story of 84 births.

பகவானின் மகாவாக்கியம் அர்ஜுனனுக் காக இருக்கிறது அல்லவா! - நீ உனது ஜென்மங்களைப் பற்றி அறியவில்லை.
God says to Arjuna: You do not know your own births.

ஒருவரை மட்டும் ஏன் கூறுகின்றார்?
Why does He only speak to one?

ஏனெனில் ஒருவருக்குத் தான் உத்திரவாதம் கொடுக்கலாம்.
Because there is the guarantee for one.

இந்த இராதை கிருஷ்ணருக்கு உத்திரவாதம் இருக்கிறது அல்லவா! ஆக இவர்களுக்குத் தான் கூறுகின்றார்.
There is the guarantee for Radhe and Krishna and so He speaks to them.

இதை தந்தையும் அறிவார், குழந்தைகளும் அறிவீர்கள் - அனைத்து குழந்தைகளும் 84 பிறவிகள் எடுக்கக் கூடியவர்கள் கிடையாது.
The Father knows and you children also know that not all of the children will take 84 births.

சிலர் இடையில் வருவர், சிலர் கடைசியில் வருவர். இவருடையது நிச்சயிக்கப்பட்டது ஆகும்.
Some will come in the middle, some will come at the end, but for this one, it is certain.

இவருக்குக் கூறுகின்றார்: - ஹே குழந்தையே! ஆக அர்ஜுன் ஆகிவிடுகிறார் அல்லவா! இரதத்தில் அமர்ந்திருக்கிறார் அல்லவா! நாம் எவ்வாறு பிறப்பு எடுப்போம்? என்பதை குழந்தைகளும் தானே புரிந்து கொள்ள முடியும்.
Baba says to this one: O child! Therefore, this one is Arjuna. He is sitting in this chariot. You children can understand for yourselves how you will take birth.

சேவையே செய்ய வில்லையெனில் சத்யுக புது உலகில் முத-ல் எப்படி வருவீர்கள்?
If you do not do any service, how could you go to that new, golden-aged world at the beginning?

இவர்களுக்கு அதிஷ்டம் எங்கு இருக்கிறது?
It would not be in your fortune.

கடைசியில் பிறப்பு எடுக்கின்றவர்களுக்கு பழைய வீடாக ஆகிக் கொண்டே போகும் அல்லவா! நான் இவருக்காக கூறுகிறேன், அவருடையது நிச்சயமானது என்று நீங்களும் கூறுகிறீர்கள்.
Those who take birth at the end will go there when the house has become old. I am speaking for this one, for the one for whom it is certain.

மம்மா, பாபா 84 பிறவிகள் எடுக்கின்றனர் என்பதை நீங்களும் புரிந்து கொள்ள முடியும்.
You can understand that Mama and Baba take 84 births.

குமார்கா, (பிரகாஷ் மணி தாதி) ஜனக் (ஜானகி தாதி) போன்ற மகாரதிகளும் 84

பிறவிகள் எடுக்கின்றனர்.

There are also Kumarka and Janak. Such maharathis take 84 births.

யார் சேவை செய்யவில்லையோ அவர்கள் அவசியம் சில பிறவிகளுக்குப் பின் வருவார்கள்.

Those who do not do service will definitely come a few births later.

நாம் தோல்வியடைந்து விட்டோம், கடைசியில் வருவோம் என்பதைப் புரிந்து கொள்கின்றனர்.

They can understand for themselves that they will fail and come later.

பள்ளியில் ஓட்டப் பந்தயத்தில் ஓடி எல்லை வரை சென்று விட்டு பிறகு மீண்டும் திரும்பி வருவர் அல்லவா! அனைவரும் ஒன்று போல இருக்க முடியாது.

In a school they race to the finishing line and return. Not everyone can be the same.

போட்டியில் சிறிதளவு கால் இன்ச் வித்தியாசம் ஏற்பட்டு விடும் பொழுது முன்னேறி விடுகின்றனர், இதுவும் குதிரைப் பந்தயம் ஆகும்.

In a race, if there is the difference of even a quarter of an inch, that one claims a number ahead. This is also a horse race.

அஸ்வம் என்றால் குதிரையாகும்.

This is an ashwa race. “Ashwa” means a horse.

இரதமும் குதிரை என்று கூறப்படுகிறது.

This chariot is also called a horse.

மற்றபடி பிரஜாபிதா தட்சன் யாகம் வளர்த்தார், அதில் குதிரைகளை அர்பணித்தார் என்று கூறுவது போன்ற விசயம் ஏதுமில்லை.

None of those things that have been said about Daksh Prajapita creating a sacrificial fire and sacrificing a horse in that sacrificial fire happened.

பிரஜாபிதா தட்சனும் கிடையாது, எந்த யக்ஞத்தையும் படைக்க வில்லை.

Neither was there Daksh Prajapita, nor was there any sacrificial fire created by him.

புத்தகங்களில் பக்தி மார்க்கத்தின் எவ்வளவு கட்டுக் கதைகள் இருக்கின்றன! அதன் பெயரே கதை. பல கதைகளைக் கேட்கின்றனர்.

So many false books have been written on the path of devotion.

நீங்கள் இதைப் படிக்கிறீர்கள்.

They are just called stories.

பல கதைகளைக் கேளுங்கள். நீங்கள் இதைப் படியுங்கள்.

They listen to many stories, whereas you study.

படிப்பை ஒரு பொழுதும் கதை என்று கூறுவது கிடையாது.
A study wouldn’t be called a story.

பள்ளியில் படிப்பு கற்பிக்கப்படுகிறது, இலட்சியம், குறிக்கோள் இருக்கிறது.
You have an aim and objective in what you study at school.

நமக்கு இந்த படிப்பின் மூலம் இந்த வேலை கிடைக்கும். ஏதாவது கிடைக்கவே செய்கிறது.
You find employment through that study; you receive something or other.

இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் அதிகம் ஆத்ம அபிமானிகளாக ஆக வேண்டும்.
You children now have to become very soul conscious.

இது தான் உழைப்பாகும்.
This does take effort.

தந்தையை நினைவு செய்வதன் மூலம் தான் விகர்மங்கள் விநாசம் ஆகும்.
Only by remembering the Father can your sins be absolved.

குறிப்பாக நினைவு செய்ய வேண்டியிருக்கிறது, நான் தான் சிவபாபா வின் குழந்தையாக ஆகிவிட்டேன் அல்லவா! பிறகு ஏன் நினைவு செய்ய வேண்டும் என்று இருந்து விடக்கூடாது.
You especially do have to remember Him. You shouldn't think that you are Shiv Baba's child anyway, and ask why you should therefore remember Him; no.

தன்னை மாணவன் என்று உணர்ந்து நினைவு செய்ய வேண்டும்.
You have to remember Him whilst also considering yourselves to be His students.

ஆத்மாக் களாகிய நமக்கு சிவபாபா ஆன்ம கல்வியை கற்பித்துக் கொண்டிருக்கின்றார் என்பதையும் மறந்து விடுகிறீர்கள்.
Shiv Baba is teaching us souls. You also forget this.

சிவபாபா என்ற ஒரே ஒரு ஆசிரியர் தான் சிருஷ்டியின் முதல், இடை, கடையின் இரகசியத்தைக் கூறுகின்றார் என்ற நினைவும் இருப்பது கிடையாது.
Shiv Baba is the only Teacher who teaches you the secrets of the beginning, the middle and the end of the world. You do not even remember this.

ஒவ்வொரு குழந்தையும் தனது உள்ளத்தில் கேட்டுக் கொள்ள வேண்டும் - எவ்வளவு நேரம் தந்தையின் நினைவு நிலைத்திருக்கிறது?
Each one of you children can ask your heart how long you stayed in remembrance of the Father.

அதிக நேரம் வெளிநோக்கு முகத்தில் செல்லக் கூடாது.
You spend most of your time in extroversion.

இந்த நினைவு தான் முக்கியமானது.
This remembrance is the main thing.

பாரதத்தின் இந்த யோகாவிற்குத் தான் அதிக மகிமை இருக்கிறது. ஆனால் யோகா கற்பிப்பது யார்? என்பது யாருக்கும் தெரியாது.
There is great praise of this yoga of Bharat, but who can teach you this yoga of Bharat? No one knows this.

கீதையில் கிருஷ்ணரின் பெயர் வைத்து விட்டனர்.
They have put Shri Krishna's name in the Gita.

இப்பொழுது கிருஷ்ணரை நினைவு செய்வதன் மூலம் ஒரு பாவமும் கூட அழியாது. ஏனெனில் அவர் சரீரதாரி ஆவார். ஐந்து தத்துவங்களால் ஆக்கப்பட்டிருக்கிறது.
Not a single sin can be cut away by remembering Shri Krishna, because he is a bodily being, made of the five elements.

அதை நினைவு செய்வது என்பது மண்ணை நினைவு செய்வது போன்றதாகும், 5 தத்துவங்களை நினைவு செய்வதாகும்.
To remember him means to remember clay. It means that you remember the five elements.

சிவபாபா அசரீரியாக இருக்கின்றார். அதனால் தான் அசரீரி ஆகுங்கள், தந்தை யாகிய என்னை நினைவு செய்யுங்கள் என்று கூறுகின்றார். ஹே பதீத பாவனனே! என்று கூறுகிறீர்கள் எனில் அவர் ஒருவர் ஆகிவிடுகிறார் அல்லவா!
Shiv Baba is bodiless and this is why He says: Become bodiless! Remember Me, your Father! You call out: "O Purifier!" Therefore, He is the only One.

கீதையின் பகவான் யார்? என்று யுக்தியாகக் கேட்க வேண்டும்.
Ask them tactfully who the God of the Gita is.

படைக்கக் கூடிய பகவான் ஒரே ஒருவராகத் தான் இருக்க முடியும்.
There is only the one God who is the Creator.

ஒருவேளை மனிதன் தன்னை பகவான் என்று கூறிக் கொண்டாலும் நீங்கள் அனைவரும் என்னுடைய குழந்தைகள் என்று ஒருபொழுதும் கூறமாட்டார்.
Even though people call themselves God, they never say that everyone is their child.

அப்படியே நடக்கட்டும் அல்லது ஈஸ்வரன் சர்வவியாபி என்று தான் கூறுவார்.
They either say, "I am God and the same applies to you", or they say that God is omnipresent.

நானும் பகவான் தான், நீங்களும் பகவான் தான், எங்கு பார்த்தாலும் நீயாகத் தான் தென்படுகின்றாய்.
They say, “I am God and you are God and, wherever I look, I only see You.

கல்-லும் நீ தான் என்று கூறி விடுகின்றனர்.
You are even in the stones.” They just say this.

நீங்கள் என்னுடைய குழந்தைகள் என்று கூற முடியாது.
They wouldn’t say that you are their children.

இவ்வாறு தந்தை தான் கூறுகின்றார் - ஹே என்னுடைய செல்லமான ஆன்மீகக் குழந்தைகளே! இவ்வாறு வேறு யாரும் கூற முடியாது. இவ்வாறு ஒரே ஒரு பரலௌகீகத் தந்தை மட்டுமே கூற முடியும்.
Only the Father says: O My beloved, spiritual children. No one else says this. Only the one parlokik Father can say this.

முஸ்லீம்களை யாராவது என்னுடைய செல்லமான குழந்தைகளே! என்று யாராவது கூறினால் அடித்து விடுவர்.
Some Muslims are my darling children! If someone says that, they will be beaten.

வேறு யாரும் சிருஷ்டியின் முதல், இடை, கடையின் ஞானத்தைக் கொடுக்க முடியாது.
No one else can give you the knowledge of the beginning, the middle and the end of the world.

நிராகார தந்தையைத் தவிர வேறு யாரும் 84 பிறவியின் இரகசியத்தைப் புரிய வைக்க முடியாது.
No one but the incorporeal Father can explain the secrets shown in the picture of the ladder of 84 births.

அவரது உண்மையான பெயர் சிவன். அவருக்கு மனிதர்கள் எண்ணிலடங்கா பெயர்களை வைத்து விட்டனர்.
Although He has been given many names, His real name is Shiva.

பல மொழிகள் உள்ளன. ஆக அவரவர்களது மொழியில் பெயர் வைத்து விடுகின்றனர். மும்பையில் பபூல்நாத் என்று கூறுகின்றனர்,
There are many languages, and so they name Him in their own language, just as in Bombay they call Him Babulnath (Lord of Thorns).

ஆனால் அவர்கள் பொருள் புரிந்து கொள்வது கிடையாது.
However, they don’t understand the meaning of that.

முட்களை மலர்களாக ஆக்கக் கூடியவர் என்பதை நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள்.

You understand that He is the One who changes thorns into flowers.

பாரதத்தில் சிவபாபாவிற்கு ஆயிரக் கணக்கில் பெயர்கள் இருக்கின்றன, பொருள் அறிந்து கொள்வது கிடையாது.
In Bharat, Shiv Baba has probably been given a thousand names, but no one understands the meanings of them.

தந்தை குழந்தைகளுக்குத் தான் புரிய வைக்கின்றார். அதிலும் தாய்மார்களை பாபா அதிகம் முன்னால் வைக்கின்றார்.
The Father only explains to you children and in this Baba keeps the mothers in the front.

இன்றைய நாட்களில் பெண்களுக்கு மகிமை இருக்கிறது, ஏனெனில் தந்தை வந்திருக்கின்றார் அல்லவா! தந்தை தாய்மார்களின் மகிமையை உயர்வாக்குகின்றார்.
Since the Father came, there is greater regard for women. The Father has increased the praise of mothers.

நீங்கள் சிவசக்தி சேனைகள், நீங்கள் தான் சிவபாபாவை அறிவீர்கள்.
You are the Shiv Shakti Army. Only you know Shiv Baba.

சத்தியமானவர் ஒரே ஒருவர் ஆவார்.
There is only the One who is called the Truth.

சத்தியம் என்ற படகு ஆடும், அசையும், ஆனால் மூழ்காது என்று பாடப்பட்டிருக்கிறது.
It is remembered that, although the boat of truth may rock, it will never sink.

ஆக நீங்கள் சத்தியமானவர்கள், புது உலகை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறீர்கள்.
Therefore, you are the true ones, the ones who are establishing the new world.

மற்றபடி பொய்யான படகுகள் அனைத்தும் அழிந்து விடும்.
All the things of falsehood are to be destroyed.

நீங்களும் இங்கு இராஜ்யம் செய்யக் கூடியவர்கள் கிடையாது.
You are not going to rule here.

நீங்கள் அடுத்த பிறவியில் வந்து இராஜ்யம் செய்வீர்கள்.
You will come and rule here in your next birth.

இது மிகவும் குப்தமான விசயமாகும், இதை நீங்கள் தான் அறிகிறீர்கள்.
These matters are very incognito and only you understand them.

இந்த பாபா கிடைத்திருக்காவிடில் எதையும் அறியாமல் இருந்திருப்பீர்கள்.
You now know that if you hadn't met Baba, you wouldn't have understood anything.

இப்பொழுது அறிந்திருக்கிறீர்கள்.
You now understand this.

இவர் யுதிஷ்டர் ஆவார், யுத்த மைதானத்தில் குழந்தைகளை நிறுத்தக் கூடியவர்.
This one is Yudhishthira, the one who alerts you children on the battlefield.

இவர்கள் அகிம்சாதாரிகள் ஆவர்.
This is a non-violent battle.

மனிதர்கள் சண்டையிடுவது தான் இம்சை என்று நினைக்கின்றனர்.
People think that only fighting with one another is violence.

ஆனால் தந்தை கூறுகின்றார் - முதல் முக்கிய இம்சை காமத்தில் செல்வதாகும். அதனால் தான் காமம் மிகப் பெரிய எதிரி என்று கூறுகின்றார். இதன் மீது தான் வெற்றியடைய வேண்டும்.
The Father says: The first and main violence is using the sword of lust. This is why lust is said to be your greatest enemy. You have to conquer it.

முக்கிய விசயமே காம விகாரமாகும், பதீதம் என்றால் விகாரியாகும்.
The main thing you have to conquer is the vice of lust.

பதீதம் ஆகக் கூடியவர்கள் தான் விகாரி என்று கூறப்படுகின்றனர், அவர்கள் விகாரத்தில் செல்கின்றனர்.
To be impure means to be vicious. Those who are impure are said to be vicious; they are those who indulge in vice.

கோபப்படுகின்றவரை இவர் விகாரி என்று கூறுவது கிடையாது.
You wouldn't call a person who gets angry vicious.

கோபப்படுபவரை கோபப்படுபவர், பேராசை உள்ளவரை பேராசைப்படுபவர் என்று கூறுவர்.
A person who becomes angry is an angry person, and a person who becomes greedy is a greedy person.

தேவதைகள் விகாரமற்றவர்கள் என்று கூறப்படுகின்றனர். தேவதைகள் பேராசையற்றவர்களாக, பற்றற்றவர்களாக, விகாரமற்றவர்களாக இருப்பர். அவர்கள் ஒருபொழுதும் விகாரத்தில் செல்லமாட்டார்கள்.
Deities are said to be completely viceless, free from greed, free from attachment and free from vice; they never indulge in vice.

விகாரமின்றி குழந்தை எப்படி பிறக்கும்? என்று உங்களிடத்தில் கேட்கின்றனர். அவர்களை விகாரமற்றவர்கள் என்று ஏற்றுக் கொள்கிறீர்கள் அல்லவா! அந்த உலகமே விகாரமற்ற உலகமாகும்.
When people ask you how children can be created without vice, tell them: "You consider the deities to be viceless and that is a viceless world.

துவாபர, க-யுகம் விகார உலகமாகும்.
The copper and iron ages are in a vicious world.

தன்னை விகாரி என்றும், தேவதைகளை விகாரமற்றவர்கள் என்றும் கூறுகின்றனர் அல்லவா! நாமும் விகாரிகளாக இருந்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.
You call yourselves vicious and the deities viceless.

இப்பொழுது இவர்களைப் போன்று விகார மற்றவர்களாக ஆகிக் கொண்டிருக்கிறோம்.
You know that you used to be vicious and that you are now becoming as viceless as them.

இந்த இலட்சுமி நாராயணனும் கூட நினைவு பலத்தின் மூலம் இந்த பதவி அடைந்திருக்கின்றனர், மீண்டும் அடைந்து கொண்டிருக்கின்றனர்.
Lakshmi and Narayan had claimed their status with the power of yoga and are also claiming it once again.

நாம் தான் தேவி தேவதைகளாக இருந்தோம், நாம் கல்பத்திற்கு முன்பு இவ்வாறு இராஜ்யம் அடைந்திருந் தோம், எதை இழந்தோமோ அதை மீண்டும் அடைந்து கொண்டிருக்கிறோம்.
We were deities; we claimed our kingdom a cycle ago. We then lost it and are claiming it back once again.

இந்த சிந்தனை மட்டுமே புத்தியில் இருந்தால் குஷி ஏற்படும்.
" If your intellects just churned this, you would have great happiness.

ஆனால் இந்த நினைவை மாயை மறக்க வைத்து விடுகிறது.
However, Maya makes you forget to maintain this awareness.

உங்களால் நிலையான நினைவில் நிலைத்திருக்க முடியாது என்பதை பாபா அறிவார்.
Baba knows that you can't stay in remembrance constantly.

குழந்தைகளாகிய நீங்கள் உறுதியானவர்களாகி நினைவு செய்து கொண்டே இருந்தால் விரைவில் கர்மாதீத நிலை ஏற்பட்டு விடும் மற்றும் ஆத்மா திரும்பிச் சென்று விடும். ஆனால் அவ்வாறு கிடையாது. முதல் நம்பரில் செல்லக்

கூடியவர் இவர் ஆவார்.
If you children remained unshakeable and stayed in remembrance, you would quickly reach your karmateet stage and you souls would be able to return home; but no! This one is the one who has to go first.

பிறகு சிவபாபாவின் ஊர்வலம் நடைபெறும்.
There will be the wedding procession of Shiv Baba.

திருமணத்தின் பொழுது தாய்மார்கள் மண் பானையில் தீபம் ஏற்றி எடுத்துச் செல்வார்கள் அல்லவா! இது அடையாளமாகும். சிவபாபா என்ற நாயகன் சதா சுடர் விட்டுக் கொண்டிருக்கும் தீபமாவார்.
Mothers take earthenware lamps to a wedding. That lamp symbolises Shiv Baba, the Bridegroom, who is the constantly lit Light.

மற்றபடி நமது தீபம் ஏற்றப்பட்டிருக்கிறது.
He has now ignited us lights.

இங்கிருக்கும் விசயத்தை பிறகு பக்தி மார்க்கத்தில் கொண்டு சென்று விட்டனர்.
They have taken the things of the present time on to the path of devotion.

நீங்கள் யோக பலத்தின் மூலம் தனது தீபத்தை ஏற்றுகிறீர்கள்.
You light your flame with the power of yoga.

யோகா மூலம் நீங்கள் தூய்மையாக ஆகிறீர்கள். ஞானத்தின் மூலம் செல்வம் கிடைக்கிறது.
You become pure by having yoga and you receive wealth by studying this knowledge.

படிப்பு தான் வருமானத்திற்கு வழி என்று கூறப்படுகிறது அல்லவா! யோக பலத்தின் மூலம் நீங்கள் பொதுவாக முழு உலகையும் குறிப்பாக பாரதத்தை தூய்மையாக ஆக்குகிறீர்கள்.
This study is your source of income. With the power of yoga, you purify Bharat in particular and the whole world in general.

இதில் கன்னிகைகள் மிகவும் நன்றாக உதவியாளர்களாக ஆக முடியும்.
Kumaris can become very good helpers in this.

சேவை செய்து உயர்ந்த பதவி அடைய வேண்டும்.
You claim a very good status by doing this service.

வாழ்க்கையை வைரம் போன்று ஆக்கிக் கொள்ள வேண்டும், குறைந்தது கிடையாது.
You have to make your lives like a diamond, nothing less.

தாய், தந்தையைப் பின்பற்றுங்கள் என்று கூறப்படுகிறது.
It is said: Follow the mother and father.

தாய், தந்தை மற்றும் நெருக்கமான சகோதர சகோதரிகளைப் பாருங்கள்.
See the mother, father and the special brothers and sisters.

குழந்தைகளாகிய நீங்கள் கண்காட்சிகளிலும் புரிய வைக்க முடியும் - உங்களுக்கு இரண்டு தந்தைகள் உள்ளனர் - லௌகீகம் மற்றும் பரலௌகீகம்.
You children can explain at the exhibitions that you have two fathers: your worldly father and the parlokik Father.

இதில் உயர்ந்தவர் யார்?
Which one is greater?

உயர்ந்தவர் கண்டிப்பாக எல்லையற்ற தந்தையாவார் அல்லவா! ஆஸ்தி அவரிடமிருந்து அடைய வேண்டும்.
The unlimited Father would surely be greater. He is the One from whom you receive the inheritance.

இப்பொழுது ஆஸ்தியைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார், உலகிற்கு எஜமானர்களாக ஆக்கிக் கொண்டிருக்கின்றார்.
He is now giving you the inheritance. He is making you into the masters of the world.

பகவானின் மகாவாக்கியம் - உங்களுக்கு இராஜயோகம் கற்பிக்கிறேன், பிறகு நீங்கள் அடுத்த பிறவியில் உலகிற்கு எஜமானர்களாக ஆவீர்கள்.
God speaks: I now teach you Raja Yoga and then, in your next birth, you become the masters of the world.

தந்தை ஒவ்வொரு கல்பத்திலும் பாரதத்தில் வந்து பாரதத்தை மிகவும் செல்வந்த தேசமாக ஆக்குகின்றார்.
The Father comes into Bharat every cycle and makes Bharat very wealthy.

நீங்கள் இந்தப் படிப்பின் மூலம் உலகிற்கு எஜமானர்களாக ஆகிறீர்கள்.
You become the masters of the world through this study.

அந்தப் படிப்பின் மூலம் என்ன கிடைக்கும்?
What do you receive from other studies?

இங்கு நீங்கள் 21 பிறவிகளுக்கு வைரம் போன்று ஆகிறீர்கள்.
Here, you become like diamonds for 21 births.

அந்தப் படிப்பில் இரவு பகல் வித்தியாசம் இருக்கிறது.
There is the difference of day and night between this study and other studies.

இங்கு தந்தை, ஆசிரியர், குரு ஒரே ஒருவர் தான்.
Here, the Father, Teacher and Guru are one.

ஆக தந்தையின் ஆஸ்தி, ஆசிரியரின் ஆஸ்தி மற்றும் குருவின் ஆஸ்தி அனைத்தையும் கொடுக்கின்றார்.
Therefore, you are given the inheritance by the Father, the inheritance by the Teacher and the inheritance by the Guru.

தேக சகிதமாக அனைத்தை யும் மறக்க வேண்டும் என்று தந்தை இப்பொழுது கூறுகின்றார்.
The Father says: Now forget everything including your own bodies.

நீங்கள் இறந்து விட்டால் உலகம் இறந்து விடும்.
When you die, the whole world is dead for you.

தந்தையின் தத்தெடுக்கப்பட்ட குழந்தைகளாக ஆகிவிட்ட பின்பு வேறு யாரை நினைவு செய்வீர்கள்! மற்றவர்களைப் பார்த்தாலும் பார்க்காதது போன்று இருங்கள்.
You have become the Father's adopted children, and so who else would you remember? Even whilst seeing others, let it be as though you don't see them.

நடிப்பை நடிப்பதற்கு வந்தாலும் இப்பொழுது நாம் வீட்டிற்குச் செல்ல வேண்டும், பிறகு இங்கு வந்து நடிப்பை நடிக்க வேண்டும் என்பது புத்தியில் இருக்கிறது.
You came to play your parts but your intellects understand that you now have to return home and then come down again to play your parts.

இது புத்தியில் இருந்தாலே அதிகக் குஷி ஏற்படும்.
If you just kept this in your intellects, you would experience great happiness.

குழந்தைகள் தேக உணர்வை விட்டு விட வேண்டும்.
You children must let go of body consciousness.

இந்த பழைய பொருளை இங்கு விட்டு விட வேண்டும். இப்பொழுது திரும்பிச் செல்ல வேண்டும்.
We have to leave these old things here because we now have to return home.

நாடகம் முடிவடைகிறது, பழைய உலகம் எரிய ஆரம்பித்து விட்டது.
Now that the play is coming to an end, the old world is to be set ablaze.

குருடனின் வம்சம் குருடர்களாக அஞ்ஞான நித்திரையில் தூங்கிக் கொண்டிருக்கின்றனர்.

Both the blind and the children of the blind are sleeping in a sleep of ignorance.

இவர்கள் தூங்கிக் கொண்டிருக்கும் மனிதர்களைக் காண்பித்திருக் கின்றனர் என்று மனிதர்கள் நினைப்பர். ஆனால் இது அஞ்ஞான நித்திரையின் விசயமாகும். இதி-ருந்து நீங்கள் எழுப்புகிறீர்கள்.
This is not the usual sleep that people have, but it is a matter of a sleep of ignorance. You have to awaken them from that.

ஞானம் என்றால் பகல் சத்யுகமாகும், அஞ்ஞானம் என்றால் இரவு க-யுகமாகும்.
This knowledge is the day, the golden age; ignorance is the night, the iron age.

இது மிகவும் புரிந்து கொள்ள வேண்டிய விசயமாகும்.
These things have to be understood.

கன்னியாவிற்கு திருமணம் ஆகிவிட்டால் அவருக்கு தாய், தந்தை, மாமியார், மாமனார் போன்றவர்களின் நினைவும் வரும்.
When a girl gets married, she remembers her parents and her in-laws, etc.

அவர்களை மறக்க வேண்டியிருக்கும்.
They now have to be forgotten.

இப்படி கூட ஜோடியாக வாழ்கின்றனர். அவர்கள் சந்நியாசி களுக்கும் கூறுகின்றனர் - நாங்கள் கணவன் மனைவியாக இருந்தும் ஒருபொழுதும் விகாரத்தில் செல்வது கிடையாது. ஞான அம்பு நடுவில் இருக்கிறது.
Some couples are such that they can show the sannyasis how they are able to refrain from lust, even though they are a couple, that they keep the sword of this knowledge between them.

தூய்மையாக இருங்கள் என்பது தான் தந்தையின் கட்டளையாகும். இரமேஷ் - உஷாவைப் பாருங்கள், ஒருபொழுதும் பதீதம் ஆக வில்லை. ஒருவேளை நாம் பதீதம் ஆகிவிட்டால் 21 பிறவிக்கான இராஜ்யம் அழிந்து விடும், திவால் ஆகிவிடுவோம் என்ற பயம் இருக்கிறது.
The Father's order is: Remain pure! Just look at Ramesh and Usha: there has never been impurity between them because of the fear of losing their kingdom of 21 births; that they would go bankrupt.

கந்தர்வ விவாஹம் என்ற பெயர் இருக்கிறது அல்லவா! இதில் சிலர் தோல்வி அடைந்து விடுகின்றனர்.
There are some who fail in this. There is also marriage in name only.

தூய்மையாக இருப்பதனால் பதவி மிகவும் உயர்ந்ததாக கிடைக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள்.B174
You know that you can claim a very high status by remaining pure.

ஒரே ஒரு பிறப்பிற்கு தூய்மையாக ஆக வேண்டும்.

You only have to remain pure for this one birth.

யோக பலத்தின் மூலம் கர்மேந்திரியங்களின் மீதும் கட்டுப்பாடு வந்து விடுகிறது.
When you gain the power of yoga you can control your sense organs.

யோக பலத்தின் மூலம் நீங்கள் முழு உலகையும் தூய்மையாக ஆக்குகிறீர்கள்.
You also purify the whole world with the power of yoga.

மிகக் குறைந்த குழந்தைகளாகிய நீங்கள் யோக பலத்தின் மூலம் இந்த முழு மலையையும் நீக்கி தங்க மலையை ஸ்தாபனை செய்கிறீர்கள்.
There are very few of you children with the power of yoga to remove this whole mountain and establish a mountain of gold.

மனிதர்கள் இதைப் புரிந்து கொள்வது கிடையாது, அவர்கள் கோவர்தன மலையைச் சுற்றிக் கொண்டிருக்கின்றனர்.
People don't understand any of this. They simply go around the Goverdhan mountain.

தந்தை வந்து தான் இந்த முழு உலகையும் தங்க யுகமாக ஆக்குகின்றார்.
Only the Father makes the whole world golden aged.

அதற்காக இமயமலை தங்கம் போன்று ஆகிவிடும் என்பது கிடையாது.
It isn't that the Himalayas will become gold.

அங்கு தங்கக் களஞ்சியம் நிறைந்து இருக்கும்.
There, the mines of gold remain full.

5 தத்துவங்கள் சதோ பிரதானமாக இருக்கும். நல்ல பழங்களைக் கொடுக்கும்.
The five elements are satopradhan. They give very good fruit.

சதோ பிரதான தத்துவத்தினால் இந்த சரீரமும் சதோ பிரதானமாக இருக்கும்.
Because matter becomes satopradhan, your bodies too are satopradhan.

அங்கிருக்கும் பழங்களும் மிகப் பெரியதாக, சுவையானதாக இருக்கும்.
The fruits there are very large and delicious.

பெயரே சொர்க்கம் ஆகும்.
The very name is heaven.

ஆக தன்னை ஆத்மா என்று உணர்ந்து தந்தையை நினைவு செய்தால் தான் விகாரங்கள் நீங்கும்.
Only when you consider yourselves to be souls and you remember the Father can you become free

from vice.

தேக அபிமானத்தில் வருவதன் மூலம் தான் விகாரத்தின் சேஷ்டை ஏற்படுகிறது.
When you become body conscious, you have a desire for lust.

யோகி ஒருபொழுதும் விகாரத்தில் செல்லமாட்டார்.
Yogis never indulge in vice.

ஞான பலம் இருக்கவே செய்கிறது, ஆனால் யோகியாக இல்லையெனில் கீழே விழுந்து விடுவீர்கள்.
Even though you might have some power of this knowledge, if you are not a yogi, you fall.

முயற்சி பெரியதா? அல்லது பிராப்தி பெரியதா? என்று கேட்கப்படுகிறது. முயற்சி தான் பெரியது என்று கூறுகிறோம்.
When you are asked whether the effort or the reward is greater, you say that the effort is greater.

அதே போன்று இதில் பெரியது யோகா ஆகும்.
Similarly, you would say that, in this, yoga is greater.

யோகா மூலம் தான் பதீதத்தி-ருந்து பாவனம் ஆகிறீர்கள்.
It is only by having yoga that you can become pure from impure.

நாம் எல்லையற்ற தந்தையிடத்தில் படிக்கிறோம் என்று இப்பொழுது குழந்தை களாகிய நீங்கள் கூறுவீர்கள்.
You children say that you are now studying with the unlimited Father.

மனிதர்களிடத்தில் படிப்பதனால் என்ன கிடைக்கும்?
What would you receive by studying with human beings?

மாதத்திற்கு என்ன வருமானம் கிடைக்கும்?
What would your monthly salary be?

இந்த ஒவ்வொரு இரத்தினத்தையும் நீங்கள் தாரணை செய்கிறீர்கள். இது இலட்சம் ரூபாய்க்கு சமமாகும்.
Each jewel you imbibe here is worth hundreds of thousands of rupees.

அங்கு பணத்தை கணக்கிடுவது கிடையாது. அளவற்ற செல்வம் இருக்கும்.
There, money is never counted; there is countless wealth.

அனைவருக்கும் அவரவர்களுக்கென்று களஞ்சியங்கள் இருக்கும்.
Everyone has his own farm, etc.

நான் உங்களுக்கு இராஜயோகம் கற்பிக்கிறேன் என்று இப்பொழுது தந்தை உங்களுக்குக் கூறுகின்றார்.
The Father says: It is now that I teach you Raja Yoga.

இது தான் இலட்சியம், குறிக்கோள் ஆகும்.
That is your aim and objective.

முயற்சி செய்து உயர்ந்த நிலையடைய வேண்டும்.
You have to become elevated by making effort.

இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது.
Your kingdom is being established.

இந்த இலட்சுமி நாராயணன் எப்படி பிராப்தி அடைந்தனர்? இவர்கள் பிராப்தியை அறிந்து கொண்ட பின்பு வேறு என்ன வேண்டும்?
How did Lakshmi and Narayan claim their reward? Once you have understood their reward, what else do you need?

கல்பத்திற்கு பின் 5 ஆண்டிற்குப் பிறகு தந்தை வருகின்றார் என்பதை நீங்கள் அறிவீர்கள், வந்து பாரதத்தை சொர்க்கமாக ஆக்குகின்றார்.
You now know that the Father comes every cycle, every 5000 years, and makes the people of Bharat into the residents of heaven.

ஆக குழந்தைகளுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இருக்க வேண்டும்.
Therefore, you children should have such enthusiasm for doing service that you won't eat until you have shown someone the path.

எதுவரை யாருக்காவது வழி காட்டவில்லையோ உணவு சாப்பிடமாட்டேன் - இந்த அளவிற்கு ஆர்வம் உற்சாகம் இருக்கும் பொழுது தான் உயர்ந்த பதவியடைய முடியும்.
Only when you have such zeal and enthusiasm can you claim a high status.

நல்லது.
Achcha.

இனிமையிலும் இனிய, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம்.
To you sweetest, beloved, long-lost and now-found children, love, remembrance and good morning from the Mother, the Father, BapDada.

ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.
The spiritual Father says namaste to you spiritual children.

தாரணைக்காண முக்கிய சாரம்:
Essence for dharna:

1) ஈஸ்வரிய சேவை செய்து தனது வாழ்க்கையை 21 பிறவிகளுக்கு வைரம் போன்று ஆக்கிக் கொள்ள வேண்டும்.
You have to make your life like a diamond for 21 births by doing Godly service.

தாய், தந்தை மற்றும் பாபாவிற்கு நெருக்கத்திலுள்ள மூத்த சகோதர சகோதரிகளை மட்டுமே பின்பற்ற வேண்டும்.
You must only follow the mother and father and the special brothers and sisters.

2) கர்மாதீத நிலை அடைவதற்காக தேக சகிதமாக அனைத்தையும் மறக்க வேண்டும்.
In order to make your stage karmateet, forget everyone, including your own body.

தனது நினைவை ஆடாது மற்றும் நிலையானதாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.
You have to make your remembrance unshakeable and constant.

தேவதைகளைப் போன்று பேராசையற்றவர்களாக, பற்றற்றவர்களாக, விகாரமற்றவர்களாக ஆக வேண்டும்.
You have to become free from greed and attachment and as viceless as the deities.

வரதானம்:துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு ஒரு நொடியில் கதி, சத்கதி கொடுக்கக்கூடிய மாஸ்டர் வள்ளல் ஆகுக.
Blessing:May you give souls in great distress liberation and salvation in a second as a master bestower.

எவ்வாறு யாருக்கும் எந்த கஷ்டமும் ஏற்பட்டு விடக்கூடாது என்று ஸ்தூல சீசனுக்காக ஏற்பாடு செய்கின்றீர்களோ, சேவாதாரிகள், பொருட்கள் ஆகிய அனைத்தையும் தயார் செய்கின்றீர் களோ, அதுபோன்றே இப்பொழுது அனைத்து ஆத்மாக்களுக்கும் கதி, சத்கதியைக் கொடுப்பதற்கான இறுதி சீசன் வரப்போகின்றது,
You make preparations here for each season physically and you bring all the servers and all the necessary materials here, so that there won't be any difficulties and time won't be wasted. In the same way, the final season for giving all souls liberation and salvation is now going to come.

துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள் வரிசையில் நிற்பதற்கான கஷ்டத்தை கொடுக்கக்கூடாது, வரவேண்டும் மற்றும் பெற்றுக் கொண்டு செல்ல வேண்டும்.
Do not make distressed souls suffer by having them wait in a queue; let them continue to come and simply take.

இதற்காக எவரெடி ஆகுங்கள்.
Become ever ready for this.

புருˆô்ர்த்தியாக வாழ்வதை விட மேலாக இப்பொழுது வள்ளல் தன்மையின் ஸ்திதியில் இருங்கள்.
Now, stay beyond an effort-making life, in the stage of a bestower.

ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு நொடியில் மாஸ்டர் வள்ளலாகி நடங்கள்.
Continue to move along as a master bestower in every thought and at every second.

சுலோகன்:இறைவனை புத்தியில் நிறைத்து வைத்துக்கொண்டீர்கள் என்றால் அனைத்து பிராப்திகளும் வந்தேன் எனது பிரபுவே என்று வந்துவிடும்.
Slogan:Keep the Lord present in your intellect and all your attainments will also say, "Yes, my lord".

அவ்யக்த சமிக்ஞை - ஏகாந்தப்பிரியர் ஆகுங்கள், ஒற்றுமை மற்றும் ஏகாக்ரதாவை தனதாக்குங்கள்
Have love for solitude and imbibe unity and concentration.

ஒற்றுமையின் கூடவே ஏகாந்தப்பிரியர் ஆகவேண்டும், யாருடைய புத்தியோகம் அனேக பக்கங்களில் இருந்து துண்டிக்கப்பட்டு இருக்குமோ மற்றும் ஒருவருக்கு மட்டும் பிரியமானவராக இருப்பாரோ, அவரே ஏகாந்தப்பிரியராக இருப்பார்.
Along with unity, become one who has love for solitude. Someone who has love for solitude has his intellect's yoga broken away from all others and has love for only the One.

ஒருவர் மீது பிரியம் கொண்டிருக்கும் காரணத் தினால் ஒருவருடைய நினைவில் மட்டும் இருக்கமுடியும்.
Because of having love for only the One, such a soul will be able to stay in the remembrance of the One.

ஏகாந்தப்பிரியர் என்றால் ஒருவரைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதாகும்.
To have love for solitude means to belong to the One and none other.

சர்வ சம்பந்தங்கள், சர்வ இரசனைகளை ஒருவரிடம் இருந்து பெறக்கூடியவர்கள் தான் ஏகாந்தப்பிரியர் ஆகமுடியும்.
By having all relationships and experiencing all sweetness with the One, you can become someone who has love for solitude.